New Sugar Mills.

* 254 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon the Minister for Industries be pleased to state—

(a) whether licences have been issued for the starting of new sugar mills in this State; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) அந்த புதிய சர்க்கரை ஆலேகள் வேலூர், திருப்பத்தூர், கோயம் புத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலேகள் ஆகும்.

திரு. என். கே. பழனிசாமி : சார், நமது மாநிலம் மற்ற மாநிலங்களே விட பருவ நிலே போன்றவைகளில் கரும்பு உற்பத்திக்குச் சாதகமாக இருக் கிறது. மற்ற மாநிலங்களில் கரும்பு உற்பத்தி ஒரு ஏக்கருக்கு 19 டன் என்று சொன்னல் நமது மாநிலத்தில் 50 டன் வரை உற்பத்தி செய்யப்படுகிறது. ரெகவரியை எடுத்துக் கொண்டால் நமது மாநிலத்தில் 10 சதவிகிதம் வரை வருகிறது. மற்ற மாநிலங்களில் 8.4 சதவிகிதம்தான் வருகிறது. இவ்வளவு சாதகங்கள் இருந்தபோதிலும், அதிகப்படியான சர்க்கரை மில்கள் இல்லே. எனவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 2 சர்க்கரை மில்கள் என்ற அடிப்படை யில் நமது மாநிலத்தில் சர்க்கரை மில்களே ஏற்படுத்த முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஐந்தாவது திட்டத்தில் எட்டு சர்க்கரை மில்கள் ஆரம்பிக்கப்படும்.

திரு. கே. எ. வகாப் : தலேவரவர்களே, பல சர்க்கரை மில்கள் தொடங் கப்படாத நிலேயில் இருக்கிறது. பங்குத் தொகையை செலுத்தியும் கூட பல மில்கள் ஆரம்பிக்கப்படாமலிருக்கின்றன. எனவே உடனடியாக அவை ஆரம் பித்து செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலேவரவர்களே, மில்கள் பங்குத் தொகையை செலுத்துவதில்தான் காலதாமதம் ஏற்பட்டது என்பது உண்மை. அரசாங்கத்தைப் பொடித்தவரையில் வேலூர் ரூ. 45 லட்சம், திருப்பத்தூர் ரூ. 23 லட்சம், கோயம்புத்தூர் ரூ. 33.93 லட்சம் என்ற அளவில் பாக்கி என்று போட்டிருக்கிருர்கள்.

[1974 சனவரி 30

திரு. ஏ. ஆர். சுப்பையா: ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்க இருக்கிற சர்க்கரை ஆலைகளில் ஜாயின்ட் செக்டாருக்கும் ஒதுக்க அரசின் கொள்கை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் கரும்பு கொடுக்கிற விவசாயிகளும் பங்குபோட்டால்தான் ஆலை சரிவர நடக்க முடியும். ஆகவே தனியார் துறையில் இல்லை என்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: கோவை சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் பங்குப்பணம் முழுவதும் வசூலாகிவிட்டதா? இல்லையென்றால், அதில் என்ன இடைஞ்சல் இருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த 3 ஆலைகளில் கோயமுத்தூர் ஆலைக்குத்தான் குறைவாக வசூலாகியிருக்கிறது கோயம்புத்தூரைப் பொறுத்தவரை இடப்பிரச்சினைதான். முதலில் ஒரு இடம் தேர்ந்தெடுத்திருந்தார்கள். அங்கே போதுமான தண்ணீர் கிடைக்காதோ என்கிற சந்தேகத்தில் பிறகு ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். இப்போது திரும்பவும் பழைய இடமே சரியானதாக இருக்கும் என்கிறார்கள். இது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: சர்க்கரை ஆலைகளை தனியார் துறைக்குத் தருவது இல்லை என்ற கொள்கை இருப்பதாகச் சொன்னார்கள். அதே போன்று இனி வருகிற ஆலைகளை கூட்டுறவுத்துறையில் ஏற்படுத்தப்போவதாகவும் சொன்னார்கள். தனியார் சர்க்கரை ஆலைகளையும் தேசியமயமாக்கும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அது கொள்கைப் பிரச்சினை. இது கேள்வி நேரம்.

திரு. க. மு. இராசகோபால்: அமைச்சர் அவர்கள் அடுத்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எட்டு சர்க்கரை ஆலைகள் வர இருப்பதாகச் சொன்னார்கள். அவை எந்த எந்த மாவட்டத்தில் வர இருக்கின்றன? செங்கல்பட்டு மாவட்டத்தில் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இடம் இன்னமும் முடிவு செய்யவில்லை.

திரு. ஏ. சி. நரசிம்மன் : கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலைகளுக்கு பங்குத்தொகை வசூலிப்பதில் நீண்டகால தாமதம் ஆகிறது. ஆகவே தனியாக ஷுகர் கார்ப்பரேஷன் என்று ஆரம்பித்து, அரசாங்கமே பங்குத்தொகை போட்டு, அந்தச் சர்க்கரை ஆலைகளை வெகுவிரைவில் ஆரம்பிக்க, வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது ஒரு நல்ல யோசனை. கூட்டுறவுத் துறையில் கண்டிஷன் போடுவார்கள். கூட்டுறவுத் துறையில் அவர் பணியாற்றியிருக்கிற காரணத்தினால் அதன் சிரமங்களை உணர்ந்து சொல்கிறார். அரசாங்கமே ஏராளமான முதல் போடவேண்டுமென்றால் தனியார்களுக்குக் கொடுப்பதைப்போல தமக்கும் கொடுக்க வேண்டும். அவர்கள் பொதுமக்களிடத்தில் நிதி திரட்டிக்கொள்வதைப்போல, அரசாங்கமும் பொதுத்துறையில் நிதி திரட்டி போடுவதற்கு மத்திய அரசு அனுமதிக்கவேண்டும் என்கிற அடிப்படையில் நம்முடைய சார்பில் சொல்லியிருக்கிறோம். கோவை மாவட்டத்தில் ஆரம்பிக்கிற சர்க்கரை ஆலையை அப்படி மாற்றலாமா என்பது யோசனை. எப்படி ஆரம்பித்தாலும் கரும்பு தருகிற விவசாயிகள் பங்கு இருந்தால்தான் சர்க்கரை ஆலைகள் நல்லமுறையில் நடைபெற முடியும்.

Production of plywood.

* 255 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to start a factory for the production of Plywood in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

நாங்குநேரி வட்டத்தில் முன்சீப் நீதிமன்றம்

* 256 வின.—திரு. வீ. கார்த்திகேசன் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில், புதிதாக முன்சீப் கோர்ட் ஒன்று ஏற்படுத்த முடிவு எடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது எங்கு அமைக்கப்படும்?